**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**

**வழக்கு எண்: STC.No. –108/2022**

**வழக்கு சாட்சி : 1(PW.3)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேதநாராயணன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | பஞ்சாப் நேஷனல் பாங்க் , Deputy Manager .நந்தி கோவில் தெரு கிளை,திருச்சி |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | | | வயது | : | 55 |

(எதிரி ஆஜர் இல்லை .எதிரி  தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 07th day of February 2025.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

<u>முதல் விசாரணை</u>

1. நான் இந்த வழக்கில் புகார்தாரர் தரப்பு 3 வது சாட்சி ஆவேன். எதிரி சாலை மாதவன் பஞ்சாப் நேஷனல் பாங்க் நந்தி கோவில் தெரு கிளை,திருச்சி வங்கியில் 2021 ம் ஆண்டு முதல் கணக்கு வைத்துள்ளார். அவரது வங்கி கணக்கு எண்.3618000100109357 ஆகும். **01.01.2022 முதல் 31.12.2024 வரையிலான அவரது வங்கி statement ஐ தாக்கல் செய்கிறேன். அது ம.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. எதிரி தற்சமயம் வரை அவரது வங்கி கணக்கில் வரவு செலவு செய்து வருகிறார். வழக்கு காசோலை ம.த.சா.ஆ.1 எங்களது வங்கிக்கு உரியது ஆகும். அதில் உள்ள கையொப்பம் எதிரி உடையது ஆகும். எதிரி ஒரு காசோலை புத்தகத்தை வாங்கியுள்ளார் . அதில் 20 காசோலை தாள்கள் இருக்கும். ஒரு காசோலையை தவிர மற்ற காசோலைகளை பயன்படுத்தவில்லை. மேற்படி காசோலை 14.02.2022 ம் எந்த தேதியில் எங்களது வங்கியால் **" Cheque un useable"** என குறிப்பிட்டு திருப்பப்பட்டது. எதிரி எங்களது வங்கி கிளையில் கணக்கு துவங்கிய விண்ணப்பம் தாக்கல் செய்கிறேன். அதில் எதிரியின் மாதிரி கையொப்பம் உள்ளது . **மேற்சொன்ன விண்ணப்பத்தின் உண்மை நகல் ம.த.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பொதுவாக மாதிரி கையொப்பங்கள் கணினியில் பதிவேற்றம் செய்து

வைத்திருக்கப்படும்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி சாலை மாதவன் பெயரில் எங்களது வங்கி கிளையில் எவ்வித கடன் தொகையோ , நகைக் கடனோ நிலுவையில் இல்லை எனறால் சரிதான்.